இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 348 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 12 – ஞாயிற்றுக்கிழமை 28 ஜுலை 2024 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 348 : Thiruvalluvar Year - 2055 - Aadi 12 - Sunday 28 July 2024 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த

# பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து - கழகம் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## தமிழ்நாடெங்கும் லட்சக்கணக்கான கழகத்தினர் பங்கேற்று - கண்டன முழக்கங்கள் எழுப்பினர்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (26.7.2024) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக, புதுடெல்லி, சாணக்யபுரியில் உள்ள வைகை தமிழ்நாடு இல்லத்தில் 257 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். புதுதில்லியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, திருச்சி சிவா, தொல் திருமாவளவன், மாணிக்கம் தாகூர், செல்வி ஜோதிமணி, சு.வெங்கடேசன், துரை வைகோ, வை.செல்வராஜ் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் ஆஷிஷ் சாட்டர்ஜி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜூலை 28 -**

**ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு. கழகம் சார்பில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கான கழகத்தினர் பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர்.**

அதன் விபரம் வருமாறு:-

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையை ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கடந்த 23.7.2024 - செவ்வாய்க்கிழமை அன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை; பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கும், பா.ஜ.க.வை ஆதரிக்கும் மாநில அரசுகளுக்கும் தாராளமாக நிதி ஒதுக்கியும், 'இந்தியா' கூட்டணி ஆளும் மாநிலங்களை முற்றிலும் புறக்கணித்தும் தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்து 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கடுமையாகக் கண்டித்தனர்.

24.07.2024 அன்று நாடாளுமன்ற வளாகத்திலும், நாடாளுமன்றத்திலும் 'இந்தியா' கூட்டணி எம்.பி.க்கள் பா.ஜ.க. அரசின் நயவஞ்சகச் செயலைக் கண்டித்து முழக்கமிட்டும், ஆர்ப்பாட்டம் நடத்தியும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினைப் பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கைப் பிரகடனமாகவே இருக்க வேண்டும்.

ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, ஒட்டு மொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாகத் தெரியவில்லை. மாறாக, தங்கள் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தைக் கக்கிடும் வகையிலும் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாகப் புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் "மாற்றாந்தாய்ப் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து ஜூலை 27 - சனிக்கிழமை அன்று (அதாவது நேற்றைக்கு) காலை 10.00 மணியளவில், மாவட்ட தலைநகரங்களில் தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும் என தலைமைக் கழகம் அறிவித்தது.

அந்த அறிவிப்புக்கொப்ப தமிழ்நாடெங்கும் மாவட்டத் தலைநகரங்களில் கழகத்தின் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில், கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெற்ற இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட லட்சக்கணக்கான கழகத்தினர் பங்கேற்று தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு எதிராக முழக்கமிட்டு தங்கள் கண்டனத்தைப் பதிவு செய்தனர்.

## ரூ. 257 கோடி மதிப்பீட்டில்

# புதுடெல்லி 'தமிழ்நாடு இல்லத்தில்' புதிதாகக் கட்டப்படவுள்ள கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார் !

**சென்னை, ஜூலை 28-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.7.2024) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக, புதுதில்லி, சாணக்யபுரியில் உள்ள வைகை தமிழ்நாடு இல்ல வளாகத்தில் 257 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.**

அதன் விபரம் வருமாறு:-

18.06.2021 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில், புதுதில்லி மிக தீவிர நில அதிர்வு மண்டலம் IV -ஆக மறுவகைப்படுத்தப்பட்டுத்துள்ளதைக் கருத்தில் கொண்டு, 'வைகை தமிழ்நாடு இல்ல' வளாகத்தில் பழைய கட்டடங்களை முழுவதுமாக இடித்து மறுமேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள விரிவான ஆலோசனை நடத்தினார். அதன்படி, விரிவான வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு, சம்மந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து உரிய ஒப்புதல்கள் பெறப்பட்டன.

புதியதாகக் கட்டப்படவுள்ள இக்கட்டடம் மிக தீவிர நில அதிர்வை எதிர்கொள்ளும் கட்டமைப்பாக வடிவமைக்கப்பட்டு, இந்திய தொழில்நுட்பக்கழகம், சென்னை (IIT, Madras) மூலம் ஆய்வு செய்யப்பட்டது. தமிழ்நாடு அரசின் பொதுத் துறையால் புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தை மறுசீரமைத்து புதிய கட்டடங்களை கட்டுவதற்கு 257 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**சாணயக்யபுரியில் உள்ள வைகை தமிழ்நாடு இல்லத்திற்கான மறுமேம்பாட்டுத் திட்டத்தில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்களின் விவரங்கள்**

இப்புதிய கட்டடம் மிக முக்கிய பிரமுகர் தொகுதி (VVIP Block), விருந்தினர் மாளிகை தொகுதி (Guest Block) மற்றும் அலுவலர்கள் குடியிருப்புத் தொகுதி (Officers Quarters Block) ஆகியவற்றை உள்ளடக்கியது. இக்கட்டடம், 3 அடித்தளங்கள், தரைத்தளம் மற்றும் 7 மேல் தளங்களைக் கொண்டதாகவும், மொத்தம் 3 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ளது.

மேலும், மிக முக்கிய பிரமுகர் அறை, 39 முக்கிய பிரமுகர்கள் அறைகள், 60 உயர்தர அறைகள் (Deluxe Rooms), 72 படுக்கை வசதிகள் கொண்ட தங்கும் கூடம் (Dormitory), பல்நோக்கு அரங்கம், 3 உணவருந்தும் அறைகள், காத்திருப்பு அறைகள், கண்காட்சி அறை, மிக முக்கிய பிரமுகர்களின் முகாம் அலுவலகம், சந்திப்பு அறைகள், உடற்பயிற்சி மையம், வணிக மையம், நூலகம் மற்றும் பல்வேறு வசதிகளுடன் இப்புதிய கட்டடம் கட்டப்படவுள்ளது.

தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், பொதுத் துறை அரசு துணைச் செயலாளர் (மரபு) திருமதி. ஜெ.இ. பத்மஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக புதுடெல்லியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, திருச்சி சிவா, தொல்.திருமாவளவன், மாணிக்கம் தாகூர், செல்வி ஜோதிமணி, சு. வெங்கடேசன், துரை வைகோ, வை.செல்வராஜ் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் ஆஷிஷ் சாட்டர்ஜி, கூடுதல் உள்ளுறை ஆணையாளர் ஆஷிஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மாநிலங்களவையில்

# முக்கியப் பிரச்சினைகளைப் பேச எதிர்க்கட்சிகளுக்கு அனுமதி மறுப்பு!

### திருச்சி சிவா குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஜூலை 28-*

*மாநிலங்களவைத் தலைவர் பாரபட்சமாக செயல்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. ஜெகதீப் தன்கரின் நடவடிக்கையைக் கண்டித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மாநிலங்களவையில் முழக்கமிட்டனர்.*

*மாநிலங்களவையில் முக்கியப் பிரச்சினைகள் குறித்து பேச எதிர்க்கட்சிகள் நோட்டீஸ் அளித்தால் அனுமதி மறுக்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது.*

*இந்நிலையில், இந்த விவகாரத்தை மாநிலங்களவை திமுக குழுத்தலைவர் திருச்சி சிவா எழுப்பினார். அப்போது, மாநிலங்களவையில் முக்கியப் பிரச்சினைகள் குறித்து பேச எதிர்க்கட்சிகள் நோட்டீஸ் அளித்தால் அனுமதி மறுக்கப்படுவதாகவும், அதேநேரம், ஆளுங்கட்சியைச் சேர்ந்த எம்.பிக்கள் நோட்டீஸ் அளித்தால் உடனடியாக அனுமதி வழங்கப்படுவதாகவும் குற்றம் சாட்டினார்.*

*மாநிலங்களவை தலைவர் ஜெகதீப் தன்கரின் இந்த பாரபட்சமான நடவடிக்கையை கண்டித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையில் முழக்கமிட்டனர்.*

## கேரளா - மேற்குவங்க ஆளுநர்களுக்கு எதிரான வழக்குகள்

# ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் !

## ஒன்றிய உள்துறை அமைச்சகத்தையும் வழக்கில் சேர்க்க உத்தரவு !

புதுடெல்லி, ஜூலை 28–

கேரளா மற்றும் மேற்குவங்க ஆளுநர்களுக்கு எதிரான வழக்கில் ஒன்றிய அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கேரளா, மேற்குவங்க ஆளுநர்கள் மாநில அரசுகள் இயற்றிய சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிலுவையில் வைத்துள்ளனர்.

அதன்படி, கேரள சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பிய 8 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆரிஃப் கான் ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு வைத்துள்ளார். 3 மசோதாக்கள் 2 ஆண்டுகளாகவும், 5 மசோதாக்கள் 1 ஆண்டாகவும் நிலுவையில் உள்ளன.

இதேபோன்று, மேற்குவங்க அரசு அனுப்பிய பல்வேறு மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் அம்மாநில ஆளுநர் ஆனந்த்போஸ் கிடப்பில் வைத்துள்ளார். இதையடுத்து, இரு மாநில அரசுகளும் ஆளுநர்களுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளன. இந்நிலையில், கேரளா மற்றும் மேற்குவங்க ஆளுநர்களுக்கு எதிரான வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தன. கேரளா மற்றும் மேற்கு வங்கம் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி, வழக்கு தொடர்ந்த உடன் ஆளுநர்கள் சில மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதும் சில மசோதாக்களை உடனே குடியரசு தலைவருக்கு அனுப்புவது வாடிக்கையாக வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

மேலும், தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த உடன் சில மசோதாக்கள் மீது ஒப்புதல் வழங்கியதையும், சிலவற்றை குடியரசுத் தலைவருக்கு அனுப்பியதையும் சுட்டிக்காட்டினார். இதையடுத்து, இருதரப்பு வாதங்களையும் கேட்ட தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வு, மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் தாமதப்படுத்தி வருவதற்கு எதிராக வழக்கில் ஒன்றிய அரசு 3 வாரத்தில் பதிலளிக்க உத்தரவிட்டது.

மேலும், இந்த வழக்கில் ஒன்றிய உள்துறை அமைச்சகத்தையும் வழக்கில் சேர்க்கவும் நீதிபதிகள் ஆணையிட்டனர்.